கோயம்புத்தூர் மாவட்டம் உட்பட இம் மாநிலத்தில் உள்ள பல்வேறு வேளாண்மைத் துறைக் கிடங்குகளில் போதுமான அளவு பூச்சிக்கொல்லி மருந்துகள் இருப்பில் வைத்துக்கொள்ளவும் பூச்சிக் கொல்லி மருந்துப் பற்றுக்குறையினல் பருத்தி மற்றும் ஏனைய பயிர்களின் உற்பத்தி பாதிக்கப்படாமலும் இருக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. சு. துரைசாமி : அமைச்சரவர்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளின் இருப்பைப்பற்றித் தெரிவித்தார்கள். இந்த இருப்பெல்லாம் எந்தத் தேதியில் இருந்த விவரம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற இருப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்போதுள்ள இருப்பை நான் சொன்னேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(2) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே. இன்றைய நிகழ்ச்சி நிரலில், "2. அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பில் இனம் " (3) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/72)" என்பதனை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.